(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 8(7).]

# பாராளுமன்றம்

## 8ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2013 யூன் 21 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2013 யூலை 09, செவ்வாய்க்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— இரட்டை வரிவிதிப்பைத் தவிர்ப்பதற்கும் வருமானத்தின் மீது வரிகொடாது தட்டிக்கழிப்பதைத் தடுப்பதற்குமாக, 2013 சனவரி 22 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்டதும், 2013.06.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 97(1)(அ) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.1),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 யூன் 05 ஆந் திகதிய 1813/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள் (இல.2),— அரசியலமைப்பின் 44(2) ஆம் உறுப்புரை மற்றும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதி, ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு மற்றும் 14 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2013 யூன் 05 ஆந் திகதிய 1813/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

# 2013 யூலை 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2999/ ’12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வட மேல் மாகாணத்தில் 2012 ஆம் ஆண்டின் முடிவில் அறியக்கிடைத்துள்ள,

(i) ஒட்டுமொத்த தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) தலசீமியா நோயாளர்களின் மத்தியிலுள்ள பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி பாடசாலை மாணவர்களில் 15 வயதுக்குக் குறைந்த தலசீமியா நோய்க்குள்ளான பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) 15 வயதுக்கு மேற்பட்ட தலசீமியா நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தலசீமியா நோயானது வட மேல் மாகாணத்தைத் தவிர ஏனைய மாகாணங்களுக்குப் பரவியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அறியக்கிடைத்துள்ள ஒட்டுமொத்த தலசீமியா நோளார்களின் எண்ணிக்கை மாகாண வாரியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) தலசீமியா நோயார்களுக்காக விசேட நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(v) தலசீமியா நோயை இல்லாதொழிப்பதற்காக இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

3254/ ’12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) அண்மையில் மடிக் கணினிகள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி ஊடகவியலாளர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மடிக் கணனிகளை வழங்குவதற்காக ஊடகவியலாளர்கள் தெரிவு செய்யப்படும் அடிப்படை யாதென்பதையும்;

(iv) மேற்படி கணனியொன்றின் விலை எவ்வளவு என்பதையும்;

(v) இற்றைவரை வழங்கப்பட்டுள்ள மடிக் கணனிகளுக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3597/ '12

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழிலற்ற ஆயுர்வேத பட்டதாரிகள் அனைவருக்கும் தொழில் வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இறுதியாக ஆயுர்வேத பட்டதாரிகளுக்கு அரச நியமனங்கள் வழங்கப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(iii) அச்சந்தர்ப்பத்தில் நியமனங்கள் வழங்கப்பட்ட ஆயுர்வேத மருத்துவ பட்டதாரிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆயுர்வேத மருத்துவ பட்டதாரியொருவரை உருவாக்குவதற்காக அரசாங்கம் செலவிடும் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஆயுர்வேத மருத்துவர்களது பற்றாக்குறையின் காரணமாக மூடப்பட்டுள்ள மருந்தகங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி மருந்தகங்களுக்கு ஆயுர்வேத மருத்துவர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3632/ '13

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் பொத்துவில் கல்விக் கோட்டத்துக்குரிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதென்பதையும்;

(ii) இதன் காரணமாக மாணவர்களின் கல்வி மட்டம் வீழ்ச்சியடைவதாக பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் கல்வித் துறையினரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருப்பதுடன் இது தொடர்பாக கிழக்கு மாகாண சபையில் கலந்துரையாடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மாணவர்களின் எதிர்கால கல்வி நலனைக் கருத்தில் கொண்டு அப் பிரதேசத்தில் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குயை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3634 ' 12

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாகம்புர மஹிந்த ராஜபக்ஷ துறைமுக எண்ணெய்த் தாங்கி பண்ணை நிர்மாணம் தொடர்பாக,

(i) கருத்திட்டத்தின் இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்ட மொத்தச் செலவினம்;

(ii) கருத்திட்டச் செலவினம் எவ்வாறு நிதியிடப்பட்டது;

(iii) கடன் வசதிகளுக்கான நியதிகள், ஏதும் இருப்பின்;

(iv) நிதிக் கிரயம் மற்றும் கடன் வட்டி ஆகியவற்றின் கொடுப்பனவு இடம்பெற்றதன் பின்னர் கருத்திட்டம் எப்போது காசோட்ட இலாப நட்டமற்ற நிலையை அடையும்;

(v) ஒவ்வொரு தாங்கியினதும் கொள்ளளவு;

(vi) தாங்கிகள் ஒவ்வொன்றும் பூர்த்தி செய்யப்பட்ட திகதிகள் அல்லது அவற்றைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் திகதிகள்

ஆகியவற்றை அவர் கூறுவாரா?

(ஆ) (i) எதிர்பார்க்கப்படும் காப்பறை எரிபொருள் (bunker fuel) விமான எரிபொருள் (aero fuel) மற்றும் எல். பி. ஜி. (LPG) ஆகிவற்றை ஏற்றிவரும் எண்ணெய்க் கப்பல்களை விடுவிக்க தேவைப்படும் தாங்கிகளின் எண்ணிக்கை;

(ii) இற்றை வரையில் துறைமுகத்திற்கு வந்துள்ள மேலே குறிப்பிடப்பட்ட எரிபொருள் வகைகளை விடுவித்துள்ள கப்பல்களின் எண்ணிக்கையையும்;

(iii) மூல கருத்திட்டத்திற்கிணங்க வருடமொன்றுக்கு துறைமுகத்திற்கு வருவதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணெய்க் கப்பல்களின் எண்ணிக்கையையும் மாதமொன்றுக்கு மேற்படி எரிபொருள் வகைகளை விடுவிக்க தேவையான தாங்கிகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3646/ '11

கௌரவ ஜோன் அமரதுங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டில் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் இலங்கை வங்கியால் பங்குகளினல் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகையையும்;

(ii) 2011 ஆம் ஆண்டில் 'பர்பசுவல் கெப்பிட்டல் அன்ட் லங்கா ஒரிக்ஸ் லீசிங் கம்பனி சிக்குரிட்டீஸ் (Perpetual Capital and Lanka Orix Leasing Securities) உடன் இலங்கை வங்கி செய்துள்ள வணிகத்தின் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2011 ஆம் ஆண்டில் இலங்கை வங்கி கொள்முதல் செய்துள்ள அனைத்து பங்குகளின் பட்டியலொன்றை கொள்முதலுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னரான கொள்முதல் விலை மற்றும் பங்குகளின் சராசரி நிறையளித்த விலை ஆகியவற்றுடன் அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், என்?

3657/ '13

கௌரவ வசந்த அலுவிஹாரே,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மாத்தளை மாவட்டத்தில், உக்குவெல பிரதேச செயலாளர் பிரிவுக்குச் சொந்தமான கட்டுதெனிய, வாரியபொல கிராமங்களுக்குச் செல்லும் பாதை, A- 9 வீதியுடன் இணைக்கப்படும் இடத்தில் காணப்பட்ட சிறிய பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் தற்போது குறித்த நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மதிப்பீடுகளின்படி புதிய பாலத்தை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி மற்றும் பணிகளை நிறைவுசெய்ய உத்தேசமாயிருந்த திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி பாலத்தை நிர்மாணப் பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) இதுவரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கென செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) குறித்த பாலத்தை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2013 யூலை 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2459/ '12

கௌரவ புத்திக பதிரண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேனாதிபதி ஹென்ரி ஸ்டீல் ஓல்கட் அவர்களால் 1890 இல் ஆரம்பிக்கப்பட்ட கண்டி ஸ்ரீ ராஹுல வித்தியாலத்துடன் இணைந்ததாக நெசவுக் கைத்தொழில் பாடசாலை ஒன்று பேணிவரப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 1962 இல் மேற்படி பாடசாலை அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட பின்னர் அந்நெசவுத் தொழில் பாடசாலையில் சேவையாற்றிய ஈ. கெக்குலாவல என்பவருக்கு பாடசாலை ஆதனங்களிலிருந்து வெளியேறுமாறு மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரின் ம/நி/பொ.நி.சு/293 ஆம் இலக்க 1965.07.26 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டள்ளது என்பதையும்;

(iii) கெக்குலாவல என்பவர் அதற்கமைய செயற்படவில்லை என்பதுடன் அவரின் பின்னர் எம்.ஜே. மெண்டிஸ் என்பவரும் அங்கு அத்துமீறிக் குடியமர்ந்துள்ளார் என்பதையும்;

(iv) இவருக்கு எதிராக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளரினால் தொடரப்பட்ட 75269 ஆம் இலக்க வழக்கின் 1988.03.08 ஆம் திகதிய தீர்ப்பின் மூலம் பாடசாலை வளவிலிருந்து வெளியேறுமாறு வழங்கப்பட்டுள்ள உத்தரவிற்கு அமைய அவர் இதுவரை செயலாற்றவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாடசாலை வளவுக்குள் அத்துமீறி வசிக்கும் ஒருவர் இருப்பது பாடசாலை நிர்வாகத்திற்கு பெரும் தடையாக உள்ளதென்பதை ஏற்றுக் கொள்கிறாரா என்பதையும்;

(ii) ஆமெனில், நீதிமன்றத் தீர்ப்புக்கு அமைய அல்லது வேறு சட்டரீதியான முறையில் இவரை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2586/ '12

கௌரவ சஜித் பிரேமதாச,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையே காணப்படும் வர்த்தக உறவுகளின் இயல்பு யாதென்பதையும்;

(ii) ஐக்கிய அமெரிக்காவுடனான வர்த்தக உறவு எமது நாட்டுக்கு எந்தளவுக்கு முக்கியமானதென்பதையும்

(iii) தற்போது இரு நாடுகளுக்குமிடையிலான இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளின் அளவு ரூபாய் மில்லியன்களில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்திப் பொருட்களை இலங்கையில் பகிஷ்கரிப்பதற்கான முயற்சியேதும் உண்டா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாறான பகிஷ்கரிப்பின் மூலம் இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2877/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 கால்டன் றக்பி சுற்றுப்போட்டி,

(i) நடைபெற்ற திகதிகள் யாவையென்பதையும்;

(ii) நடைபெற்ற மைதானங்கள் யாவையென்பதையும்;

(iii) சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய விளையாட்டு அணிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய வெளிநாட்டு வீரர்கள் யாவரென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் செலுத்தப்பட்ட பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) இதில் பங்குபற்றிய உள்ளூர் விளையாட்டு வீரர்கள் யாவரென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) கால்டன் றக்பி சுற்றுப்போட்டியின் ஏற்பாட்டாளர் யாவரென்பதையும்;

(ii) மேற்படி சுற்றுப்போட்டியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அனுசரணையாளர் யாவரென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு அனுசரணையாளரும் வழங்கிய பணத் தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி சுற்றுப்போட்டியை ஒளிபரப்பிய தொலைக்காட்சி அலைவரிசை யாதென்பதையும்;

(v) மேற்படி சுற்றுப்போட்டியின் ஒளிபரப்புக்கான செலவினம் யாதென்பதையும்;

(vi) ஒளிபரப்பிற்கான அனுசரணை வழங்கிய நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(vii) இதற்காக மேற்படி நிறுவனங்கள் வழங்கிய பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2892/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்தின் செலவினமானது வெளிப்படைத் தன்மையின் அடிப்படையில் எவ்வாறு அமைச்சினால் அவதானிக்கப்படுகின்றது அல்லது கட்டுப்படுத்தப்படுகின்றது என்பதையும்;

(ii) அமைச்சுகள், அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் செலவின எல்லைகள் வெவ்வேறாக யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கேள்விப் பத்திரங்கள் மற்றும் நடபடிமுறைகளின் நியமங்களை நிர்ணயிப்பதற்கும் இற்றைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்கும் நபரையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட நியமங்கள் கடைசியாக எப்போது இற்றைப்படுத்தப்பட்டன என்பதையும் அவை மீண்டும் எப்போது இற்றைப்படுத்தப்படும் என்பதையும்;

(iii) அமைச்சரவை அமைச்சரினாலும் அமைச்சு, திணைக்களம் மற்றும் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினாலும் அங்கீகரிக்கப்படக்கூடிய கேள்விப்பத்திர எல்லைகளை வெவ்வேறாகவும்;

(iv) கேள்விப் பத்திரங்கள் தொடர்பில் ஏற்படக்கக்கூடிய ஏதாவது ஊழல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் யார் அல்லது அமைப்பு யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

3071/ ’12

கௌரவ அஜித் பி.பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தென் மாகாண சபையைத் தாபித்து அதன் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) தென் மாகாண சபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் I ஆம் நிரலின் (மாகாண சபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாம் அட்டவணையின் III ஆம் நிரலின் ( ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச்சட்டங்கள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3196/ ’12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு, சவுதி அரேபியாவில் வீட்டுப் பணிப் பெண்களாகவும் மற்றும் பிற வேலைவாய்ப்புகளின் நிமித்தமும் சென்றுள்ள பெரும் எண்ணிக்கையிலான இலங்கைப் பெண்களும் ஆண்களும் கடுமையாக துன்புற்று தற்போது அந்நாட்டில் “ஒலாயா” தடுப்பு முகாமிலும் “ஜித்தா” பாலத்திற்குக் கீழும் தங்கியுள்ளனர் என்பதையும்;

(ii) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பொருத்தமான தொழில் அமைவிடங்கள் கிடைக்காமை, துன்புறுத்தல்கள் மற்றும் ஊதியம் செலுத்தப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் அதற்குக் காரணமாய் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி இலங்கையர்களை உடனடியாக இந் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இவர்களது குடும்பங்களின் பாதுகாப்பு, நலனோம்புகை மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு துரித கதியில் நடைமுறைப்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3257/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இடம்பெயர் முகாம்களில் இருந்தவர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒலுமடு கிராமத்தில் மீள்குடியேற்றப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி கிராமத்தில் குடியேற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) மீளக் குடியமர்த்தப்பட்டவர்களுக்காக வீடுகளை அமைத்துக்கொள்ள வழங்கப்பட்டுள்ள பொருள் ரீதியிலான மற்றும் நிதி ரீதியிலான உதவிகள் யாவை;

(iv) இக்கிராமத்திற்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய வசதிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) ஒலுமடு கிராமத்தில் உள்ள,

(i) சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களின் எண்ணிக்கை;

(ii) விதவைப் பெண்களின் எண்ணிக்கை;

(iii) ஒரு பாதத்தை இழந்த ஆண்களின் எண்ணிக்கை;

(iv) தாய் மற்றும் தந்தையை இழந்த பிள்ளைகளின் எண்ணிக்கை

எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3678/ '13

கௌரவ விக்டர் அந்தனீ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் காலத்திற்குக் காலம் ஏற்படும் கடும் வரட்சி போன்ற சீரற்ற காலநிலை நிலைமைகள் உள்ளடங்கலாக பல்வேறு காலநிலை நிலைமைகளுக்கு ஈடுகொடுக்கக்கூடிய தெங்கு இனங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகளின் சாதக, பாதக நிலைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3681/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) செழிப்பான தென்னங் காணிகள் துண்டாக்கப்பட்டு ஏலத்தில் விடப்படுதல், உள்நாட்டுத் தேங்காய் உற்பத்தி குறைவடைவதற்கும் தேங்காயின் விலை அடிக்கடி அதிகரிப்பதற்கும் காரணமாக அமைந்துள்ளதால், இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) சிறு தென்னந்தோட்ட உரிமையாளர்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) தெங்கு நிவாரணம் வழங்கப்படும் முறையியல் யாது;

(iv) புதிதாக தெங்குப் பயிர்ச்செய்கையை ஆரம்பிக்கும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3771/ '13

கௌரவ விஜித பேருகொட,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச ஈட்டு, முதலீட்டு வங்கி 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலப்பகுதியில்,

(i) தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ள பங்களிப்பு ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) புதிய போக்குகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்கு வைத்து நடைமுறைப்படுத்திய விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) வங்கிக் கிளை வலையமைப்பில் மேற்கொண்டுள்ள விரிவாக்கல் யாதென்பதையும்;

(iv) வடக்கு, கிழக்கு அபிவிருத்தி நடடிக்கைகளில் செலுத்திய பங்களிப்பு யாதென்பதையும்;

(v) நெருக்கமான சமூகக் கடப்பாடுகள் தொடர்பில் நிறைவேற்றிய செயற்பாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3870/ '13

கௌரவ செஹான் சேமசிங்ஹ,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்குப் பயிர்ச்செய்கை சபையின் கருத்திட்டமொன்றான 'கப்ருக்க புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நாற்றுமேடைகளுக்கான விதைத் தேங்காய்களைப் பெற்றுக் கொள்வது எவ்வாறு என்பதையும்;

(ii) விதைத் தேங்காய்களைப் பெற்றுக் கொள்வதற்காக விசேட தென்னை மரங்கள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி மரங்களை இனங்காண்பதற்கு செயற்பட்டவர்கள் யாவர் என்பதையும்;

(iv) இதுவரை இனங்காணப்பட்டுள்ள விதைத் தேங்காய்களை பெற்றுக் கொள்ளும் மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) 'கப்ருக்க புரவர' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள தெங்கு நாற்று மேடைகளில் இதுவரை நடப்பட்டுள்ள விதைத் தேங்காய்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு விதைத் தேங்காய் நாற்றுமேடையும் அமைந்துள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி நாற்றுமேடைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்ற பயிர்ச் செய்கைக்கு தகுந்த நிலையில் காணப்படுகின்ற தென்னங் கன்றுகள் தொடர்பாக மேற்கொள்ளும் அடுத்த கட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2587/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தற்போது இலங்கையினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உடன்பட்டுள்ள சர்வதேச மனித உரிமை உடன்பாடுகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட உடன்பாடுகளை,

(i) நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை கடப்பாட்டைக் கொண்டுள்ளதா;

(ii) நாட்டினுள் வலுப்படுத்துவதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்பட்டுள்ளனவா;

(iii) நடைமுறைப்படுத்தாமையால் நாட்டுக்கு ஏற்படும் பாதகமான தாக்கங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பிலான அரசாங்கத்தின் கொள்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2712/ '12

கௌரவ புத்திக பதிரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, வேரகம்பிட்டிய, தொட்டுபொல வீதி, ரத்கம்வத்தயில் வசிக்கும் திரு. பீ. ஜீ. எஸ். கே. விக்கிரமநாயக்க உட்பட புகையிரதத் திணைக்களத்தின் 16 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் HRC/6061, 6081, 6083, 6099, 6163, 6214, 6214, 6306, மற்றும் 06Bஆம் இலக்கங்களின் கீழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்கள் என்பதையும்;

(ii) இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் சிபாரிசு ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழு 2007/07/16 ஆம் திகதி வழங்கியுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி சிபாரிசு இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) குறித்த சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படுமெனின் அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2878/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொபிடெல் நிறுவனத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்தில் ரெலிகொம் நிறுவனத்திற்கு சொந்தமான பங்குகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை மொபிடெல் நிறுவனம் ஈட்டிய இலாபம் அல்லது அடைந்த நட்டம் எவ்வளவென்பதையும்;

(iv) இந்நிறுவனத்தின் விளம்பர பிரச்சாரத்திற்காக 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை வருடாந்தம் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவன்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் மொபிடெல் நிறுவனத்தினால் விளையாட்டுகள் அல்லது ஏனைய நடவடிக்கைகளுக்காக அனுசரணை வழங்கப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்:

(ii) மேற்படி ஒவ்வொரு விடயத்திற்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை மற்றும் ஆண்டுகள் தனித்தனியே யாதென்பதையும்:

(iii) எதிர்காலத்தில் அனுசரணை வழங்குவதற்காக உடன்படிக்கை செய்துகொண்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்:

(iv) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ஒதுக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்:

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மொபிடெல் நிறுவனத்தின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதி தனித்தனியே எவ்வளவென்பதையும்:

(ii) மேற்படி பதவிகளுக்கு இவர்களை நியமிக்கும் அதிகாரிகள் யாவரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2893/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிதி, திட்டமிடல் அமைச்சின் பிரதான அதிகாரிகள் யார் என்பதையும்;

(ii) மேற்குறிப்பிடப்பட்ட அதிகாரிகளின் பெயர்கள், ஆற்றல்கள், தகைமைகள் மற்றும் வயது ஆகியன வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) அமைச்சின் ஒழுங்கமைப்பு அட்டவணையினை யாது என்பதையும்;

(iv) அமைச்சில் பதவியுயர்வுகள் எவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றன என்பதையும்;

(v) அரசியல் மயப்படுத்தலின் அழுத்தங்களுக்கு வளைந்து கொடுக்காத காரணத்தினால் எவரேனும் அதிகாரிகளைப் பாதிக்கும் வகையில் நீதி முறைச் சீர்குலைவு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(vi) அவ்வாறாயின், அந்த அநீதியின் தன்மையினையும்;

(vii) பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்ட பிரகாரம் யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2013 யூலை 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2588/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் இலங்கைக்கு,

(i) வருடாந்தம் கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு உதவித் தொகைகள் வெவ்வேறாக யாது;

(ii) ஆகக் கூடுதலான இருதரப்பு உதவிகளை வழங்கும் பிரதானமான (10) பத்து நாடுகளும் யாவை;

(iii) இருதரப்பு உதவிகளை வழங்கியுள்ள மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நாடும் வழங்கிய பணத் தொகை வெவ்வேறாக யாது;

(iv) பல்தரப்பு உதவிகளை வழங்கிய நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் யாவை;

(v) ஆகக்கூடுதலான பல்தரப்பு உதவிகளை வழங்கியுள்ள 10 நாடுகளும் அல்லது நிறுவனங்களும் வழங்கியுள்ள உதவிகளின் பெறுமதி வெவ்வேறாக யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இலங்கைக்கு வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதில் பின்பற்றப்படுகின்ற உபாய வழிமுறைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2879/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 ஆம் ஆண்டில் பொசொன் பண்டிகை நிமித்தம் கொழும்பு தேசிய நூதனசாலையை மையமாகக் கொண்டு டிஜிட்டல் தொழில்நுட்ப முறையைப் பாவித்து ஏதேனும் சமய நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்த நிகழ்ச்சித் திட்டத்தைச் சமர்ப்பிக்க

(I) சம்பந்தப்பட்ட அங்கீகாரம் வழங்கியவர்கள் யாவர் என்பதையும்;

(ii) பயன்படுத்தப்பட்ட பெயர் யாது என்பதையும்;

(iii) ஏற்புடைய நோக்கம் யாது என்பதையும்;

(iv) செயலாற்றிய நிறுவனம் யாது என்பதையும்;

(v) செலவாகிய மொத்தச் செலவினம் யாது என்பதையும்;

(vi) செலவிட்ட செலவினத்தை ஈடுசெய்வதற்காக அனுசரணை வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(vii) அனுசரணை வழங்கிய நிறுவனம் அல்லது நிறுவனங்களினால் வழங்கப்பட்ட பணத்தொகைகள் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2894/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 1950, 1960, 1970, 1980, 1990, 2000, 2005, 2006, 2007, 2008, 2009, 2010, 2011 மற்றும் 2012 ஆகிய நிதியாண்டுகளின் முடிவின் போதுள்ளவாறு,

(i) அரசாங்கத்தின் வருடாந்த வருமானம்;

(ii) அரசாங்கத்தின் வருடாந்த வருமானத்திற்கும் செலவிற்கும் இடையிலான ஒப்பீட்டு ரீதியிலான வித்தியாசம்;

(iii) மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP);

(iv) (அ)(ii)இல் குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்தினை, அந்த வருடத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாகவும்;

(v) ஆளொருவருக்கான கடன்;

(vi) ஆளாருவருக்கான கடன் ஒப்பீட்டை ரூபாவிலும் ஐக்கிய அமெரிக்க டொலரிலும்

அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2920/ '12

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அமைந்துள்ள வலஸ்முல்ல மருத்துவமனையானது, சுற்றுக் கிராமங்கள் பலவற்றிலுள்ள நோயாளர்களுக்கு சுகாதார சேவைகளை வழங்கி வந்த மருத்துவமனை என்பதையும்;

(ii) இன்றளவில் குறித்த மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான பாரிய பற்றாக்குறை நிலவுகிறது என்பதையும்;

(iii) மருத்துவமனையில் இரத்த வங்கியின் நடவடிக்கைகள் பிரேத அறையில் பிரேதப் பரிசோதனை நடவடிக்கைகள் நடைபெறுவதில்லை என்பதையும்;

(iv) மேற்படி மருத்துவமனையின் எந்தவொரு வாட்டிலும் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக நோயாளிகள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதையும்;

(v) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தை வலஸ்முல்ல நகரத்திலிருந்து அகற்ற திட்டமிடப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வலஸ்முல்ல மருத்துவமனையில் நிலவும் மனித மற்றும் பௌதீக வளப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3072/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு மாகாணசபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) கிழக்கு மாகாணசபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாணசபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் Iஆவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் IIIஆவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3266/ '12

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹோமாகம, பாதுக்க மற்றும் ஹன்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள ஒரு சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாத காரணத்தினால் அப் பிரதேசங்களின் மக்கள் பாரிய சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும்,

(i) தற்போது சேவையாற்றும் கிராம உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) வெற்றிடங்கள் நிலவும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) குறித்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்

வெவ்வேறாக அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3683/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான கால கட்டத்தினுள் அமுலாக்கப்பட்ட நிலைபேறான கமத்தொழில் நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தின் I, II கட்டங்களின் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி நோக்கங்களை அடைவதற்காக இற்றைவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) 2012 ஆம் ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட பயிர்ச் செய்கை கருத்திட்டங்களின் தற்போதைய நிலைமைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் யாவை என்பதையும்;

(ii) இதற்கேற்ப எதிர்வரும் காலத்தில் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3773/ '13

கௌரவ விஜித பேருகொட,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005ஆம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையான காலப்பகுதியில் 'கமத்தொழில் உற்பத்திகளுக்கான பெறுமதி சேர்த்தல் மற்றும் வழங்கல் செயற்பாடுகளின்போது அறுவடைக்குப் பிந்திய சேதங்களைக் குறைப்பதன் மூலம் கமத்தொழில் உற்பத்திகளுக்கான சந்தைப்படுத்தலை மேம்படுத்தல்' எனும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் யாதென்பதையும்;

(ii) இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள கடமைப் பொறுப்புகள் யாவை என்பதையும்;

(ii) மக்களுக்கு இதன் மூலம் கிடைத்துள்ள நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கமத்தொழில் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றத்தின் பொருட்டு தேசிய பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்டுள்ள சேவைகளும் பங்களிப்புகளும் யாவை என்பதையும்;

(ii) S.2KR 2010-2012 நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் கருதப்படுவது யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3871/ '13

கௌரவ செஹான் சேமசிங்ஹ,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2005 ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப் பகுதியினுள்,

(i) கரையோர வள முகாமைத்துவக் கருத்திட்டத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) 'டீ கொம்' நிறுவனத்தின் செயற்பாடு யாது என்பதையும்;

(iii) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் ஆற்றப்பட்ட மக்கள் சேவைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி மூன்று நிறுவனங்களினதும் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்கள் யாவை என்பதை தனித்தனியே அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2589/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் மிகத் தனவந்தர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி;

(ii) இலங்கையின் மிக வறியவர்களில் 20% அனுபவிக்கும் தேசிய வருமானத்தின் பெறுமதி

யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே (அ) i மற்றும் ii இற்கான விடைகளுக்கமைய, தேசிய வருமானப் பகிர்வில் முரண்பாடு காணப்படுமாயின், இதனை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர், இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2895/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டவாறு 2002 - 2003 இல் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரி விலக்கின் பெறுமதியானது இலங்கை ரூபாய் 1000 பில்லியன் அளவிற்கு பெரும் தொகையாக இருந்ததா என்பதையும்;

(ii) இல்லையெனில், அதன் உண்மையான பெறுமதியையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட வரி மன்னிப்பு 2004 - 2005 இல் விலக்கிக் கொள்ளப்பட்டதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்பு பிழையானதும் சட்டவிரோதமானதும் ஆகும் என்பதை 2004 இல் இருந்த அரசாங்கம் நிரூபித்துள்ளதா என்பதையும்;

(ii) குறிப்பிட்ட வரிவிலக்கு விலக்கிக்கொள்ளப்பட்டதன் பின்னர் இற்றைவரை அறவிடப்பட்ட வரியின் பெறுமதியை வருடாந்த அடிப்படையிலும்;

(iii) அவ்வித குறைந்த பெறுமதியான வரிகளை அறவிட்டமைக்கான காரணத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) (i) ஐக்கிய தேசியக் கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்ட வரி மன்னிப்புகளை எதிர்மறையான விமர்சனங்களை முன்வைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் 2004 இற்கு பின்னர் ஏதவாது வரி மன்னிப்புகளை முன்வைத்ததா என்பதையும்;

(ii) அவ்வாறெனில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வழங்கப்பட்ட வரி மன்னிப்புகளின் பெறுமதியையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2921/ '12

கௌரவ புத்திக பதிரண,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின், கோட்டேகொட, பெலிதெனிய பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைக்குச் சொந்தமான கட்டடம் எவ்வித அறவீடுமின்றி தேசிய பயிலுனர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) தேசிய பயிலுனர் சபையினால் 2011 ஆம் ஆண்டு யூன் 25 ஆம் திகதியன்று அக்கட்டடத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி நிலையத்தில் பாடநெறிகளை ஆரம்பிக்கும் பொருட்டு இடம்பெற்ற அங்குரார்ப்பண விழாவுக்கு செலவிடப்பட்ட பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பயிற்சி நிலையம், அது ஆரம்பிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகார சபைக்கு சொந்தமான கட்டடத்திலிருந்து அகற்றப்பட்டமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி பயிற்சி நிலையம் நடாத்தப்படும் புதிய இடம் யாதென்பதையும்;

(iv) அக்கட்டடத்திற்காக செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் உரிமையாளரின் பெயரும் முகவரியும் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3020/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 யூலை மாத இறுதியில் ஓடிக்கொண்டிருந்த புகையிரதம், அதன் பயண முடிவுக்கு முன்னதாக இடைவழியில் நின்றுவிட்டதா என்பதையும்;

(ii) ஆமெனின், இடைவழியில் நின்றுவிட்ட புகைவண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்கூறப்பட்ட புகையிரதங்கள் இடைவழியில் நின்றுவிட்டமை தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக ஏற்பட்டதா என்பதையும்;

(iv) மேற்கூறிய கால எல்லைக்குள் புகையிரதங்கள் இடைவழியில் நின்றுவிட்டமை அவற்றிற்கு பயன்படுத்திய எரிபொருள் காரணமாக ஏற்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனின், அந்த எரிபொருள் பெறப்பட்ட நிறுவனம் யாதென்பதையும்;

(vi) மேற்படி நிறுவனத்தினால் தரக்குறைவான எரிபொருள் வழங்கப்பட்டமை தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vii) மேற்படி நிலைமை காரணமாக புகையிரத திணைக்களத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3684/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப சிலாபம் பெருந்தோட்டக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படும் தோட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் காணியின் பரப்பளவு மற்றும் மேற்கொள்ளப்படும் முக்கிய பயிர்ச் செய்கைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(iii) கடந்த 10 வருடத்தினுள் ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் கிடைத்த வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

3775/13

கௌரவ விஜித பேருகொட,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவசரகால சட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அவ்வாறு இணைப்பதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அவ்வாறு இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டு மாகாணங்களாக மீண்டும் பிரகடனப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iv) மேற்படி மாகாணங்களை பிரித்தலானது, உயர்நீதிமன்ற வழங்குத் தீர்ப்பொன்றுக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) இன்றேல், அவ்வாறான வழங்குத் தீர்ப்பொன்று வழங்கப்படுவதற்கு முன்னதாக அவ்வாறு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2013 யூலை 26, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2590/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை" எனும் கருத்திட்டத்தை அமுலாக்குவதன் நோக்கம் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்ற கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் அமுலாக்கப்படுகின்ற ஒரு கிராமத்திற்காக செலவிடப்படுகின்ற மொத்தச் செலவு யாதென்பதையும்;

(iv) நாடளாவிய ரீதியில் மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக செலவிடப்படுகின்ற மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

(v) அப்பணத்தை மேற்படி கருத்திட்டத்தின் திட்டவட்டமான இலக்குகளை அடைவதற்காகவே ஆற்றுப்படுத்துவதற்காக வகுக்கப்பட்டுள்ள திட்டம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்கும் போது பக்கச்சார்பின்றி செயலாற்ற மேற்கொள்ளப்போகும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2898/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2012 யூலை 01 ஆம் திகதியிலுள்ளவாறாக,

(i) நாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கைப் பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பொலிஸ் சேவையிலுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சராசரி மாதாந்தச் சம்பளம் எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2003, 2006 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் யூலை 01ஆம் திகதியிலுள்ளவாறாக,

(i) இலங்கைப் பொலிஸில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இலங்கைப் பொலிஸிலிருந்த பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் சராசரி மாதாந்தச் சம்பளம் எவ்வளவென்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

2923/ '12

கௌரவ புத்திக பதிரண,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போதைய கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர் மேற்படி அமைச்சை பொறுப்பேற்ற போது கடற்றொழில் கூட்டுத்தபானம் இலாபம் ஈட்டியதா அல்லது நட்டத்தில் இயங்கியதா என்பதையும்;

(ii) அச்சந்தர்ப்பத்தில் பெறப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவென்பதையும்;

(iii) 2012.12.31 ஆம் திகதியளவில் கடற்றொழில் கூட்டுத்தபானம் ஈட்டிய இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றும் தற்காலிக, அமைய மற்றும் நிரந்தர ஊழியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2009 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை திறந்து வைக்கப்பட்ட புதிய மீன் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விற்பனை நிலையங்களுக்காக கடந்த 3 வருட காலப்பகுதியில் செலுத்தப்பட்ட மொத்த வாடகைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி மீன் விற்பனை நிலையங்களில் சேவையாற்றுகின்ற பணியாளர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) இன்றளவில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2982/ '12

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஆசிரியர்களின் தொழில் கௌரவத்தை பாதுகாக்கும் விதத்தில் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ப நிலையான சம்பளத் திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை என்பதையும்;

(ii) கல்வி அமைச்சு உடன்பட்டுள்ளவாறு, இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கான எந்தவொரு செயல்முறையும் இதுவரை தயாரிக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே குறிப்பிட்டுள்ள இடைக்கால சம்பளத் திட்டத்தை நிலுவைச் சம்பளத்துடன் வழங்குவதற்கு இதுவரை இயலாமற்போனமைக்கான காரணங்கள் யாவை;

(ii) மேற்படி இடைக்கால சம்பளத் திட்டத்துக்கு அமைய ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய மொத்த நிலுவைச் சம்பளம் யாது;

(iii) சம்பளப் பிரச்சினைக்கு மேலதிகமாக ஆசிரியர் – அதிபர் ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்ட ஏனைய கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iv) ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான நிலையான சம்பளத் திட்டமொன்றைத் தயாரித்து இவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3021/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 யூலை மாத இறுதியிலும் ஓகத்து மாத ஆரம்பத்திலும் பயணிகள் போக்குவரத்திற்காக பயன்படுத்துகின்ற பேருந்து வண்டிகளில் திடீர் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கிடைத்துள்ள அத்தகைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அவற்றில் இபோச பேருந்து வண்டிகள் தொடர்பாக கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கோளாறுகள் ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(v) மேற்படி (i) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இ.போ.ச. பேருந்து வண்டிகளில் கோளாறுகள் ஏற்பட்டமையின் காரணமாக இ.போ.ச. போக்குவரத்து சேவைகளுக்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி நட்டம் ஏற்பட்டமை தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3073/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேல் மாகாணசபை தாபிக்கப்பட்டு அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேல் மாகாணசபையினால் இதுவரை நிறைவேற்றப்பட்டுள்ள நியதிச்சட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நியதிச்சட்டத்தினதும் பெயர், இலக்கம் மற்றும் நிறைவேற்றப்பட்ட திகதி வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்ட,

(i) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் Iவது நிரலின் (மாகாணசபை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையின் IIIவது நிரலின் (ஒருங்கியை நிரலின்) விடயங்களுக்குரிய நியதிச் சட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3256/ '12

கௌரவ பி. ஹரிசன்,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சிறைக் கைதிகளை பார்ப்பதற்காக வரும் நபர்கள் மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் சிறைச்சாலையினுள் பிரவேசிக்கும்போது சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், சிறைச்சாலையினுள் போதைப்பொருள் மற்றும் செல்லிடத் தொலைபேசிகளைக் கொண்டு வருபவர்கள் யாவர் என்பதையும்;

(iii) சிறைச்சாலையினுள் இடம்பெறும் முறைகேடான சம்பவங்களுக்கு சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு கிடைக்கின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) வெலிக்கடை சிறைச்சாலையினுள் இட வதிகளை வழங்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) தற்போது மேற்படி சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3283/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 1967.01.05 ஆம் திகதிக்கு முன்னர் ஒலிபரப்புத் திணைக்களத்தில் (கூட்டுத்தாபனமாக தாபிக்கப்படுவதற்கு முன்னர்) அமைய அடிப்படையில் சேவையாற்றிய கே.ஏ கருணாசேன, எம்.டீ.சீ.பி பெரேரா, எல்.பி. கருணாரத்ன, ஈ.எம். விமலசேன ஆகியோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமை தொடர்பாக, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் புலனாய்வு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட HRC/5518/06/L – 13 ஆம் இலக்க 2007/8/20 ஆம் திகதிய சிபாரிசுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட சிபாரிசுகள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) 17/2005 ஆம் இலக்க, 2005/10/ 05 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3290/ '12

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கொழும்பு மருதானைப் பிரதேசத்தில் அமைந்துள்ள அல் அதீஸ் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தின் மூலம் டபிள்யு. எம். சுரேகா த சில்வா எனும் யுவதி வேலைவாய்ப்புக்காக சவூதி அரேபியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்பதையும்;

(ii) அங்கு இவர் மரணமடைந்துள்ளார் என்பதையும்;

(iii) குறித்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக போலி பொலிஸ் அறிக்கைகள் உள்ளிட்ட போலியான தகவல்களை சமர்ப்பித்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) போலியான தகவல்களின் மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள யுவதியை வெளிநாட்டுக்கு அனுப்புவதற்காக செயலாற்றிய மேற்படி நிறுவனத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சுரேகா த சில்வா என்பவர் மரணமடைந்ததற்கான காரணம் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த காரணம் யாது;

(iii) மேற்படி மரணம் தொடர்பிலான மரண பரிசோதனை அறிக்கையை சமர்ப்பிப்பாரா;

(iv) இறந்த யுவதியின் சார்பில் இவரது பெற்றோருக்குக் கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2591/ '12

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க சனாதிபதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால விதப்புரைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி விதப்புரைகள் பகிரங்கப்படுத்தப்பட்ட திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஏற்கனவே மேற்படி ஆணைக்குழு சமர்ப்பித்த இடைக்கால விதப்புரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கத்தால் இயலுமாயிருந்ததா என்பதையும்;

(ii) இன்றேல் மேற்படி இடைக்கால விதப்புரைகளை நடைமுறைப்படுத்த எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3685/ '13

கௌரவ நிமல் விஜேசிங்க,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்திற்கு சொந்தமான தென்னந் தோட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் காணியின் பரப்பளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iii) கடந்த 5 வருடங்களில் மேற்படி ஒவ்வொரு தோட்டத்தினதும் தேங்காய் விளைச்சல் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு தோட்டத்தினதும் செலவினம், வருமானம் மற்றும் இலாபம் அல்லது நட்டம் தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2902/ '12

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எந்த அமைச்சின் கீழ் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (தொ.ஒ.ஆ) செயற்படுகிறது என்பதையும்;

(ii) தொ.ஒ.ஆ. இன் தற்போதைய பணிப்பாளர் நாயகத்தின் பெயர் மற்றும், 2006 ஆம் ஆண்டு முதல் இப்பதவியை வகித்தவர்களின் பெயர்கள் ஆகியனவற்றை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2006 முதல் இற்றை வரை தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அலைவரிசையை ஒதுக்கியமையினால் ஈட்டப்பட்ட வருமானத்தை வருடாந்த மற்றும் நிறுவனத்தின் அடிப்படையிலும்;

(ii) தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்ட சில அலைவரிசைகள் மீளப் பெறப்பட்டு அவை புதிய அல்லது பழைய தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மீள் ஒதுக்கப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறெனில், மேற்கூறப்பட்டதன் பிரகாரம், மேற்குறிப்பிடப்பட்ட அலைவரிசைகள் மீள் ஒதுக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்களையும்;

(iv) மீளப் பெறப்பட்ட அலைவரிகைகளை மீள்ஒதுக்கீடு செய்ததிலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அலைவரிசையை ஒதுக்குவதன் மூலம் பாரிய அளவிலான பணத்தை இந்தியா சம்பாதித்தது என்பதையும், மேற்படி அலைவரிசைகளை பிழையான முறையில் ஒதுக்கீடு செய்ததன் மூலம் பாரியளவு மோசடி இந்தியாவில் இடம்பெற்றது என்பதையும் அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2924/ ’12

கௌரவ புத்திக பத்திரன,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பின்னவல யானைகள் சரணாலயத்திற்கு அருகில் விலங்கினக் காட்சிச் சாலையொன்றை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்கு செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) உத்தேச விலங்கினக் காட்சிசாலையை நிர்மாணிப்பதற்கான நிதி பெறப்படுவது உள்நாட்டு நிதியத்திலிருந்தா இன்றேல் வெளிநாட்டு நிதியத்திலிருந்தா என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெற்றுக்கொள்ளப்படும் நிறுவனத்தின் அல்லது நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனமும் பெற்றுக் கொடுக்கும் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3022/ '12

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு உரித்தான கடல் எல்லையில் மீன்பிடிப்பதற்காக 2012 ஆம் ஆண்டில் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சினால் அல்லது வேறு நிறுவனமொன்றினால் வெளிநாடுகளுக்கு உரிமப்பத்திரம் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய அனுமதிப்பத்திரங்கள் அல்லது உரிமப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(iii) அவை வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இற்கமைய அனுமதி வழங்கப்படவில்லையாயின், அனுமதியின்றி கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளனவா என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளுக்கு அமைய கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் அவை உரித்தான நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கைப்பற்றப்பட்ட மீன்பிடிப் படகுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) கைப்பற்றப்படாத அனுமதியற்ற மீன்பிடிப் படகுகள் உரித்தான நாடுகள் யாவை என்பதையும்;

(v) அவை கைப்பற்றப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3075/ '12

கௌரவ அஜித் பி. பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார சிறப்புப் பட்ட கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி கற்கை நெறிக்கென இன்றுவரை பதிவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வோராண்டிற்கும் அமைய வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கற்கை நெறியை கற்று பட்டம் பெற்றுள்ள எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இணைந்த சுகாதார சிறப்புப் பட்ட கற்கை நெறியின் கற்கைக் காலத்தை 03 ஆண்டுகள் வரை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி பட்டப் படிப்பின் தரத்தினை உறுதிசெய்வதற்கு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

## (2013 யூலை 26, வெள்ளிக்கிழமை)

3193/ '12

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன , மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கொழும்பு 09, தெமட்டகொட, பேஸ்லைன் வீதி, 575/17 ஆம் இலக்க இடத்தில் தற்காலிகமாக வசிக்கும் திரு. எம். இராமசாமிக்கு அனுமதியற்ற குடியிருப்பாளர்களுக்காக வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் பேலியகொடை குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கான வீடமைப்புத் தொகுதியிலிருந்து வாடகை அடிப்படையில் வீடொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபை இணக்கம் தெரிவித்துள்ளதென்பதையும்;

(ii) திரு. எம். இராமசாமிக்கு குடியிருப்பதற்காக வீடொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் 10.05.187 ஆம் இலக்க 2005.09.26 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு HRC/165/03/7 (VI) இலக்கத்தின் கீழ் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் அது இதுவரை நடைமுறைபடுத்தப் படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு. எம். இராமசாமிக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் நிரந்தர குடியிருப்பின் பொருட்டு வீடொன்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3281/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1986 ஆம் ஆண்டு இலங்கை மகாவலி அதிகார சபையினால் அக்குரண பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 31 குடும்பங்கள் மகாவலி "பி" வலயத்தில், வெலிகந்த பிரிவுக்குச் சொந்தமான சேனபுர கிராமத்தில் குடியேற்றப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) 1992.04.14 ஆம் திகதி புலிப் பயங்கரவாதிகளினால் அலிஞ்சிபொதான கிராமவாசிகள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட மரண அச்சுறுத்தல் காரணமாக, சேனபுர கிராமத்தின் குடியிருப்பாளர்கள் மேட்டு நில மற்றும் நீர்ப்பாசன காணிகளிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்கள் என்பதையும்;

(iii) போர் முடிவுற்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையின் கீழ் இவர்கள் மீண்டும் குறித்த காணிகளில் குடியமர விருப்பம் தெரிவித்துள்ள போதிலும், இலங்கை மகாவலி அதிகார சபை இதுவரை அதற்கான அனுமதியை இவர்களுக்கு வழங்கவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இடம்பெயர்ந்துள்ள நிலையில் தற்போது வசித்துவரும் சேனபுர மக்களுக்கு மீண்டும் அங்கு குடியமர்வதற்கும் விவசாயம் செய்வதற்கும் அனுமதி வழங்குவாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3289/ '12

கௌரவ அஜித் குமார,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தெற்கு கடுகதி நெடுஞ்சாலையை நிர்மாணிக்கின்ற கருத்திட்டம் காரணமாக காலி மாவட்டத்தினுள் மூடப்பட்டுள்ள அல்லது நிர்மாணிப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு உரித்தான வீதிகளின் விபரமான தகவல்கள் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) மேற்படி வீதிகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்காக தெற்கு கடுகதி நெடுஞ்சாலை கருத்திட்டத்தினால் அல்லது அரசாங்கத்தின் வேறு நிறுவனமொன்றினால் மேற்படி உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வழங்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி அந்தந்த உள்ளூராட்சி மன்றங்கள் குறித்த வீதிகளை அமைத்துள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி அ (ii) இற்கமைய நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பின்,

(i) பணம் வழங்கப்பட்டுள்ள நிறுவனம்;

(ii) பணம் வழங்கப்பட்டுள்ள ஏற்புடைய வீதிகள்;

(iii) ஒவ்வொரு வீதிக்காகவும் வழங்கப்பட்ட பணத்தொகை மற்றும் உரிய திகதி

யாவை என்பதை ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் அமைய தனித்தனியே அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3194/ '12

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு 9, தெமட்டகொட நீர்த்தேக்க ஒழுங்கையில் 87/4 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள கொழும்பு மாநகர சபைக்குரிய உத்தியோக பூர்வ இல்லம், கொழும்பு மாநகர சபையின் நீர்த்தேக்கப் பொறுப்பாளர் பதவியை வகித்த திரு. ஏ.எஸ்.பி. செனவிரத்ன குடியிருப்பதற்காக வழங்கப்பட்டிருந்தது என்பதையும்;

(ii) அந்த நபர் 2007ஆம் ஆண்டு உயிரிழந்துள்ளார் என்பதையும்;

(iii) அவரது மனைவி அல்லது பிள்ளைகள் இல்லாததை மறைத்து தற்போது அந்த இல்லத்தில் செனவிரத்ன எனும் பெயரில் அழைக்கப்படுபவர் ஒருவருடன் குடும்பமொன்று பலவந்தமாக குடியமர்ந்து உள்ளதென்பதையும்;

(iv) மாளிகாகந்த நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையின் பின்னர் (வழக்கு இல. 13724/எம்) இவர்களை அங்கிருந்து வெளியேற்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்கூறிய இடத்தில் தற்போதுள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்களை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

3282/ '12

கௌரவ மொஹமட் அஸ்லம்,— நீர்ப்பாசன, நீர் வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) எதுகல, நவசேனபுர, வெலிகந்த, இலக்கம் 61 இல் தற்போது வசிக்கும் ஏ. காதர் மீரா உட்பட்ட சிலரினரால் பயிர்ச் செய்கை செய்யப்பட்டு, 1992 ஆம் ஆண்டு இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலின் பின்னர் கைவிடப்பட்ட மகாவலி "பி" வலயத்தின் செவனபிட்டிய, கரபொலவெவ பிரதேசத்தின் ஒதுக்கக் காணிகளையும் பாராம்பரிய காணிகளையும் கொண்டுள்ள 22 ஏக்கர், 01 றூட், 31 பர்சஸ் கொண்ட பயிர்ச் செய்கை நிலத்தை மீண்டும் பெற்றுத்தருமாறு கோரப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளை மீண்டும் வழங்குவதுடன் தொடர்புடைய மூன்று முன்மொழிவுகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தினால் எல்/பி/3/2 ஆம் இலக்க 2010.12.28 ஆம் திகதிய கடிதம் மூலம் மகாவலி அதிகார சபையின் "பி" வலய வதிவிட முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதுவரை குறித்த முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தில் 01 ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவின்படி ஏ. காதர் மீரா உட்பட்ட சிலருக்கு தீர்வொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3195/ '12

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி, மிலித்தூவ, எச்.கே. எட்மன்ட் மாவத்தை, இலக்கம் 160 எனுமிடத்தில் வதியும் திரு. எம். இஸட். மொஹமட் மற்றும் திருமதி பாத்திமா சனீராவுக்குச் சொந்தமான தனியார் காணியொன்று போலியான உறுதியொன்றின் மூலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக காலி, விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவினால் காலி நீதவான் நீதிமன்றில் 21972 ஆம் இலக்கத்தின் கீழ் தொடரப்பட்டுள்ள வழக்கு பொலிசாரினாலேயே வாபஸ் பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) 1977 ஆம் இலக்க, 2002.11.23 ஆம் திகதிய குறித்த போலி உறுதியில் கையொப்பம் அல்லது பெருவிரல் அடையாளத்தில் திரிபுபட்ட தன்மையொன்று காணப்படுவதாக விரல் அடையாளப் பதிவாளரினால் இல லீ.லே 07/2009 மற்றும் 2010.02.08 ஆம் திகதிய உத்தியோகபூர்வ அறிக்கையின் மூலம் நீதவான் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் மேற்படி வழக்கு வாபஸ் பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி போலி உறுதியைத் தயாரித்த நொத்தாரிசுக்கு அல்லது வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இதுவரையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) குறித்த போலி உறுதியைத் தயாரித்த நொத்தாரிசு உள்ளடங்கிய சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களுக்கு எதிராக தாமதிக்காது சட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?